# மஹாளய சங்கல்பம் 8.10.2018 திங்கள்

பிரம்மாவின் ஒரு சுற்று(50 வருடங்கள்) முடிந்து இரண்டாம் சுற்றில் "த்விதீய பரார்த்தே" முதல் வருடம் அதாகில் தற்பொழுது 51 பிரம்ம வருடம்

பிரம்ம வருடத்தில் ஒருநாள் என்பது ஒரு கல்பம் (30 கல்பம் கொண்டது பிரம்ம மாதம்) இப்பொழுது வருடம் துவங்கி முதல் நாள் "ஸ்வேதவராஹ கல்பம்"

ஒருகல்பம் என்பது "14 மனுக்கள்" கொண்டது அதில் 6 மனுக்கள் முடிந்து 7வது மனு "வைவஸ்வத மன்வந்தரம்" நடைபெறுகிறது

ஒரு மன்வந்திரம் என்பது 71 மகா யுகங்களை கொண்டது அதில் 27 மகாயுகங்கள் முடிந்து தற்பொழுது 28 மகாயுகம் "அஷ்டாவிம்சதி" நடைபெறுகிறது

ஒரு மகாயுகம் என்பது 4 யுகங்களை கொண்டது அதில் கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், முடிந்து "கலியுகம்" நடைபெறுகிறது.

ஒரு கலியுகம் என்பது 432,000 ஆண்டுகள் கொண்டது அதில் 5119வருடங்கள் கழிந்து 5120ம் வருடம் நடைபெறுகிறது.

ஒரு பிரகஸ்பதி சம்வஸ்ர சக்கரம் என்பது 60 ஆண்டுகளை கொண்டது அதில் 19வருடம் முடிந்து 20வது வருடம் தற்பொழுது "விலம்ப வருஷம்" நடைபெறுகிறது

ஒரு வருஷம் என்பது 2 அயனங்களை கொண்டது அதில் முதலில் உத்திராயணம் முடிந்து தக்ஷிணாயனம் காலம் (சூரியன் தென்திசையில் பயணிக்கும் காலம்)

ஒரு அயனம் என்பது 3 பருவகாலங்களை கொண்டது தற்பொழுது தக்ஷிணாயனத்தில் "வருஷருது" (மழைக்காலம்)

ஒரு பருவகாலம் என்பது 2 மாதங்களை உள்ளடக்கியது அதில் "பாத்ரபதம்" மாஸம் (சூரிய வருஷமுறையில் - சௌரமான முறையில் "கன்னியா" மாஸம்

*(ஒர சௌரமான மாதத்தில் சூரியன்2.25 நட்சத்திரங்கள் வழியாக பயணிப்பார் அதில் கன்னியா மாஸத்தில் இரண்டாவது நட்சத்திரத்திரம் அஸ்தம் நட்சத்திரத்தில் உள்ள தினம்)*

ஒரு மாதம் என்பது 2 பக்ஷங்களை கொண்டது அதில் "சந்திரமாதம்" சுக்லபக்ஷம் (வளர்பிறை) முடிந்து தற்பொழுது "கிருஷ்ண பக்ஷம்" (தேய்பிறை)

ஒரு பக்ஷம் என்பது 15 திதிகளை கொண்டது அதில் தேய்பிறையில் 15வது திதி "அமாவாசை" தினம்

ஒரு தினம் என்பது ஒரு கிழமை ஒரு திதி, ஒரு நக்ஷத்திரம், ஒரு யோகம், இரண்டு கரணம் கொண்டது

திங்கள் கிழமையில் "இந்துவாஸரம்"

சந்திரன் நின்ற 13வது நட்சத்திரத்திரமான " அஸ்தம் " நட்சத்திரத்தில்

சந்திர சூரிய சேர்கை நிலையான 21வது யோகமான "சித்தம் யோகம்"த்தில்

அமாவாசையின் முன்பாதியான "சதுஷ்பாதம்" கரணத்தில்

ஒரு பகல் பொழுதை 5 பாகங்களாக பிரித்து அதில் வரும் 4ம் பாகத்தில் "அபரான்ன" காலத்தில்

## இடம்:

பிரபஞ்சத்தின் பரந்தவெளி 7 பாகங்களாக பிரித்து (1. ஜம்பூ த்வீபம், 2. பிலக்ஷ த்வீபம், 3. சான்மலி த்வீபம், 4. குச த்வீபம், 5. க்ரௌஞ்ச த்வீபம், 6. சாக த்வீபம், 7. புஷ்கர த்வீபம்) அதில் "ஜம்பூத்வீபம்" எனும் தீவு போன்ற அண்டத்தில்

தீவு போன்ற ஜம்பூத்விபம் எனும் அண்டம் 9 வருஷங்களாக பிரிக்கப்பட்டு (1. பாரத வர்ஷம், 2.ஹேமகூட வர்ஷம், 3. நைஷத வர்ஷத்ம், 4.இளாவ்ருத வர்ஷம், 5. ரம்ய வர்ஷம், 6. ச்வேத வர்ஷம், 7. குரு வர்ஷம், 8. பத்ராச்வ வர்ஷம், 9.கந்தமாதன வர்ஷம்) அதில் "பாரத வர்ஷம்" எனும் இடத்தில்

பாரதவர்ஷம் 9 கண்டங்களாக பிரிக்கப்பட்டு (1.பரதகண்டம், 2. கிம்புருகண்டம், 3. அரிவருடகண்டம், 4. இளாவிரதகண்டம், 5. இரமியகண்டம், 6. இரணியகண்டம், 7. குருகண்டம், 8. கேதுமாலகண்டம், 9.பத்திராசுவகண்டம்) அதில் "பரத கண்டம்" எனும் இந்த பூமியில்

இமய மலையின் தென்புறத்தில் "மேரோர் தக்ஷிணே பார்ச்வே"

"கோதாவரி, காவேரி நதி மத்திமே" நதிகள் இடையே

காஞ்சி மண்டலம் சமீபம் அருகில் கிழக்குபுறத்தில் சென்னை எனும் ஊரில்

கோத்திரத்தை சார்ந்த முன்னோர்களை உத்தேசித்து இந்த மகாளய அமாவாசை தர்பணத்தை செய்கிறேன்.

www.prohithar.com | 9840369677 | prohithar@gmail.com

ஸ்ரீதணிகை பஞ்சாங்கம்